# திருநாளைப்போவார் திருக்காதை

173
60



ஆக்கியோன்

திரு. அடிகளாசிரியன்

# திருநாளைப் போவார் திருக்காதை

ஆக்கியோன்
திருமூலரின் முத்தமிழ்வேத சதாசிவர்
**திரு. அடிகளாசிரியன்**
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியன்
சித்தநாதேச்சுராதீனம்,
குகையூர் - அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்



**பதிப்பாசிரியன்**
சோதிடரத்னா **அ. சிவபெருமான்**
4சி. வெள்ளிவிழாச் சாலை
செயங்கொண்ட சோழபுரம் - 621 802
பெரம்பலூர் மாவட்டம்

குகையூர் சித்தநாதேச்சுராதீனத் திருவருள்
நிலையத்தின் ஆன்மநலப்பணி வெளியீடு - 17

## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திருநாளைப் போவார் திருக்காதை |
| ஆசிரியர் | : | திரு. அடிகளாசிரியன் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - ஏப்ரல் 2006 |
| அளவு | : | டெம்மி 1/8 |
| பக்கங்கள் | : | 8+56 = 64 |
| விலை | : | ரூ. 20/- (ரூபாய் இருபது) |
| படிகள் | : | 500 |
| வெளியீட்டாளர் | : | திருவருள் நிலைய வெளியீட்டகம்,<br>குகையூர் அஞ்சல், கல்லக்குறிச்சி வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 606 306,<br>தமிழ்நாடு. |
| அச்சகம் | : | ஜெ.கே.பிரிண்டர்ஸ்.<br>புகையூர்தி நிலைய சாலை.<br>(தீயணைப்பு நிலையம் எதிரில்).<br>சிதம்பரம் - 608 001. கடலூர் மாவட்டம்,<br>உலா பேசி - 9443115921. |
| கணினி வடிவமைப்பு | : | பிரைன் கம்ப்யூட்டர்ஸ்.<br>அறிவு டிசைன்ஸ்.<br>புகையூர்தி நிலைய சாலை.<br>(தீயணைப்பு நிலையம் எதிரில்).<br>சிதம்பரம் - 608 001.<br>உலா பேசி - 9443115921. |
| உரிமை | : | ஆசிரியருக்கே. |

## பதிப்புரை

திருநாளைப் போவார்தம் திருஉள்ளம் வாழ்க
திருநாளைப் போவார்தம் திருமொழியும் வாழ்க
திருநாளைப் போவார்தம் திருத்தொண்டும் வாழ்க
திருநாளைப் போவாரே திருச்சிற்றம் பலமே.

- திரு. அடிகளாசிரியர்

தவத்திரு திருநாளைப்போவார் என்னும் நந்தனார் வரலாற்றை எனது தந்தையார் பேராசிரியர் திரு.அடிகளாசிரியரவர்கள், "**திருநாளைப்போவார் திருக்காதை**" என்னும் பெயரால் இனிய இலக்கியமாக இயற்றியுள்ளார். இவ்விலக்கியம் புதிய சிந்தனைகளுடன் எளிமையும் சுருக்கமுமாக ஐம்பத்திரண்டே விருத்தப் பாடல்களில் படைக்கப் பெற்றுள்ளது.

சிதம்பரத்தில் ஓமக்குளம் என்ற பகுதியில் நந்தனார் திருக் கோயில் அமைந்துள்ளது. அக்கோயிலில் கால்கோள் விழாவிற்கு அண்ணல் காந்தியடிகள் வந்தார் என்பது வரலாற்றுச் செய்தி. இக் கோயிலின் திருக்குட முழுக்கு விழா 8.9.1994ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அத்திருக்குட முழுக்கு நினைவாக "**ஸ்ரீ நந்தனார் சரித்திரம்**" என்ற நூலை உரைநடை வடிவில் எழுதிவெளியிட்டுள்ளேன். அந்நூலை ஆய்வு முறையில் எழுத எனக்குப் பயிற்சி அளித்தவர் எனது தந்தையார் ஆவர். ஆதலால் அந்நூலில் காணப்படுகின்ற செய்திகள் பாடல் வடிவில் "திருநாளைப்போவார் திருக் காதையில்" இடம்பெற்றுள்ளன. அவ் விலக்கியத்திலுள்ள நயனமான கருத்துக்கள் வருமாறு:

நூலாசிரியர், நந்தனார் பிறந்த குலத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவரைப் புலையர் என்று கூறிடும்

நிலையில், “புலையெனும் யாதொரு செயலையுமே அவ்வடியார் செய்கிலர்” என்று கூறி நந்தனாரின் நற்பண்புகளால் புலையர் இனம் என்ற கருத்தை மறுத்துரைக்கின்றார்.

அடுத்து பாணர், பறையர், கடம்பர், துடியர் என்ற சொற்கள் புலையின மக்களைக் குறிப்பன என்பதும் தவறு என்று கூறுகின்றார். அஃதாவது பாணர் யாழையும், பறையர் பறையையும், கடம்பர் மிருதங்கத்தையும் துடியர் உடுக்கையையும் இசைக்கின்ற இசைக் கலைஞர்களேயன்றிப் புலையர்கள் அல்லர் என்றும் கூறுகின்றார்.

“நீறார் மேனி நிமலனிடம்
நீண்ட அன்பர் செய்பத்தி
தேறார் நீர்போல் தெளிவுதர
திருவை விளைத்து நின்றதம்மா”

என்ற பாடல் கருத்து உணர்ந்து இன்புறத் தக்கதாகும். நந்தனார் குடிப்பிறப்பு ஏரிநீர் போன்றதென்றும், அவர் இறைவன்மேல் கொண்ட பக்தி தேற்றாங்கொட்டை போன்றதென்றும் உருவகம் செய்துள்ளார்.

மேற்பாடலில் வந்துள்ள “தேறார் நீர்” என்பதன் தொடர்பாக யான் அறிந்த செய்தி வருமாறு:

1950-60ஆம் ஆண்டுவரை உடையார்பாளையம் (தற்போதைய பெரம்பலூர் மாவட்டம்) பகுதி மக்களின் குடிநீர் ஏரி நீர்தான். அம்மக்கள், கலங்கியிருக்கும் ஏரிநீரில் “தேற்றாங் கொட்டை” என்ற விதையினை நன்கு தேய்த்து தேய்த்துக் கலங்கிய நீரைத் தெளிந்த நீராக்குவார்கள். குடிக்க அருகதையில்லாத ஏரிநீர் நல்ல குடிநீர் ஆகிவிடும். ஆகவே, இம்மனித இனம் பல்வேறு உலக விருப்பங்களில் குழம்பிக்

கிடந்தாலும் இறைவன் மீது மேற்கொண்ட அன்பும் நம்பிக்கையுமே தேற்றாங்கொட்டையாய் இருந்து தெளிவடைய வைக்கும்.

மேற்கூறியவாறு பல்வேறு நயங்கள் இவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. ஆதலால் இவ்விலக்கியத்தை வெளிக் கொணர உதவிய அனைத்து நெஞ்சங்களையும் மனதாரப் பாராட்டி வணங்கி மகிழ்கின்றேன்.

இங்ஙன்

10.04.2006 **அ. சிவபெருமான்**

# நூலாசிரியர் முன்னுரை

**அத்தியாரோபம் அபவாதம் என்னும் பந்தமும் வீடும்**

"அத்தியாரோபம் என்றும் அபவாதம் என்றும் சொல்லும்
உத்தியால் பந்தம் வீடென்று உரைக்கும் வேதாந்தமெல்லாம்"

(கைவல்யம் - தத்துவ விளக்கப்படலம்)

மேலே கூறப்பட்ட இரண்டுள் 'அத்தியாரோபம்' என்பது யாதெனில், பிரம்மமாகிய ஒரு பொருளைக் கற்பனையால் நோக்குவதாகும். அக்கற்பனை மூலகற்பனை, சூக்கும கற்பனை, தூல கற்பனை என மூவகைப்படும். மூல கற்பனையினால் பிரம்மத்திலிருந்து ஈசனும், சீவர்களும் தோன்றுவர். சூக்கும கற்பனையினால் ஈசர்க்கும், சீவர்க்கும் வேண்டிய சமஷ்டி, வியஷ்டியான தத்துவங்களெல்லாம் தோன்றும் என்க.

இனி அபவாத உத்தி என்பது யாதெனில் பிரம்மத்தின் இடத்திலிருந்து மூன்று கற்பனைகளால் தோன்றிய எல்லாத் தத்துவங்களையும் காரிய, காரண முறைப்படி, காரியங்களையும், காரணங்களையும் அடக்கிக் கொண்டேபோய் முடிவில் பிரம்மமாகிய 'காரணப் பொருளை' ஒன்றாகப் பார்த்தல் என்க.

மேலே கூறிய கருத்தை நோக்கினால் ஒருவருக்குக் கற்பனையினால் தோன்றிய பொருட்கள் எல்லாம் உலகமாகக் காட்சி கொடுத்து பந்தத்தைத் தரும் என்பதும் - இதனை விட்டு அபவாத உத்தியால் காரிய, காரணம் என்னும் இரண்டுள் காரியத்தைக் காரணத்தில் அடக்கிக்

கொண்டேபோய்ப் பார்த்தால் .ஈற்றில் பிரம்மம் ஒன்றே விளங்கி மோட்சத்தைத் தரும் என்பதும் புலனாகின்றன.

எனவே அத்தியாரோபமாகிய ஆரோப கற்பனையால் ஒருவருக்குப் பந்தம் உண்டாகின்றது என்றும் - அவர்க்கே ' அபவாத ' உணர்வால் மோட்சம் உண்டாகின்றது என்றும் அறிகின்றோம். ஆனால் சிறந்த பேரறிஞரான மாணிக்கவாசகர் இவ்வாறு சொல்ல வில்லை. அவர் உலக உயிர்களின் ' பந்த ' உணர்வையும் நோக்கி, பற்றற்ற உணர்வையும் நோக்கி இறைவன் வீடு பேற்றைத் தருகின்றான் என்பார். இதனை அவர் "பந்தமும் வீடும் படைப்போன் காண்க" (திருவாசகம் திருவண்டப் பகுதி) - 52 என்றவாறு உணர்த்தியுள்ளார்.

இறைவன் ' திருநாளைப்போவார் ' என்கின்ற ஒருவர்க்குப் ' பற்றுள்ள' முன்னிலையில் தனு, கரண, புவன போகங்களாகிய பற்றுள்ள பொருட்களைப் படைத்துக் கொடுத்திருக்கலாம். அவர்க்கே பற்று நீங்கிய பின்னிலையில் பந்தப்பொருள் உணர்ச்சியெல்லாம் நீக்கிவிட்டு வீடுபேற்றைத் தந்திருக்கலாம்.

திருநாளைப் போவார்க்குப் பந்தத்தை நீக்கி 'வீடுபேற்றை'த் தர எண்ணிய சிவபெருமான் தில்லை தீட்சிதரிடம் சென்று திருநாளைப் போவார்க்கு அருட்செய்யும்படி கூறியதும், திருநாளைப் போவாரிடம் சென்று தில்லை தீட்சிதரிடம் சென்று அருள் பெறும்படி கூறியதும் ஆகிய இவையெல்லாம் தில்லைக் கூத்தருடைய அருட் செயலே என்று தெரிகின்றது.

இத்திருநாளைப்போவார்த் திருக்காதையில் இறைவனுடைய இரண்டு விதமான அருட்செயல்களையும் நாம் பார்க்கின்றோம்.

## தெளிவு என்னும் நடை

தண்டியலங்கார ஆசிரியர் பலவித இலக்கிய நடைகளைக் கூறுகின்றார். அதில் ஒன்று தெளிவு என்பதாகும். 'தெளிவு எனப்படுவது பொருள் புலப்பாடே, என்பது தண்டியலங்கார சூத்திரம். யான் இக்கருத்தைப் பின்பற்றியே என்னுடைய இலக்கியங்களை எல்லாம் படைத்தேன். யான், இப்போது படைத்துள்ள திருநாளைப் போவார் திருக்காதை என்னும் இவ்விலக்கியம் தெளிவு என்னும் நடையையே பின்பற்றி மக்களுக்கு கூறவேண்டிய பொருள்களைப் பொருள் புலப்படுமாறு கூறுகின்றது என்க.,

## அச்சகப் பணி

வழக்கம்போல் தம் கடின உழைப்பால் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்து வருபவர் எனது இளையமகன் **அ. சிவபெருமான்** ஆவார். அவ்வகையில் அவர் பதுப்பிக்கும் இருபத்தோராவது நூல் இதுவாகும்.

குகையூர் **சி. முருகன், சி. முருகேசன்,** செயங்கொண்ட சோழபுரம் **கி. இறைக்கோ, இடைப்பாடி அ. கணேசன்** ஆகியோர் இந்நூலின் உருவாக்கத்திற்கு உதவிய தமிழ்த் தொண்டர்களாவர். இவர்களின் தொண்டு அரிய தொண்டாகும். எவ்வாறெனில் அழைத்தபோதெல்லாம் அயராமல் வந்து எழுதி உதவினார்கள் என்பதாம்.

**அச்சிட உதவியவர்**

துரைமங்கலம் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளுக்கு வேலையர் என்றும் கருணைச் சிவப்பிரகாசர் என்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்களின் இளவலான கருணைச் சிவப்பிரகாச ஐயருடைய பரம்பரையில் தோன்றி பெரம்பலூரில் வாழ்ந்து வந்தவர் திரு. **உமாபதி ஐயராவர்.**

மேற்குறித்த உமாபதி ஐயருக்குக் கருணைச் சிவப்பிரகாச ஐயர் என்றும், தண்டபாணி என்றும் இரண்டு அரும்பெறல் புதல்வர்கள் உள்ளனர். அவர்களுள் திரு. உ.தண்டபாணி என்பவர் புலவர்பட்டம் பெற்று தமிழாசிரியராகவும், தலைமையாசிரியராகவும் பணிபுரிந்து ஒய்வு பெற்று குளித்தலையில் வாழ்ந்து வருகின்றார். அவர் என்னுடைய தமிழ்ப் பணிக்கு உதவவேண்டும் என்று கருதி ரூபாய் நான்காயிரம் வழங்கி இந்நூலை அச்சிடுமாறு கூறினார். இத்தொகையுடன் மேலும் சில ஆயிரங்களைச் செலவழித்து இந்நூலை அச்சிட்டேன்.

இந்நூலை மிகச்சிறப்பாக வடிவமைத்து நல்ல முறையில் அச்சிட்டு வழங்கியவர் சிதம்பரம், ரயில்வே பீடர் ரோடு **பிரைன் கம்ப்யூட்டர்ஸ்** மற்றும் **ஜெ.கே. பிரிண்டர்ஸ்** உரிமையாளராகிய உயர்திரு. **சி.கே. அறிவழகன்** ஆவார்.

மேற்கூறியவாறு இந்நூல் உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதுமையான வயதில்(96) நரம்பு நோயால் பாதிக்கப்பெற்றுப் பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கியுள்ள என்னை எங்கள் ஆதினச் சீடர்கள் புரவலர்களாக இருந்து

புரிந்து வருகின்றனர். அவர்கள் என்னைப் புரப்பதாலும் என் குடும்பத்தினர் என்னைக் காப்பதாலும் நான் தமிழையும் ஆன்மீகத்தையும் புரந்து வருகின்றேன். இது இறைவன் திருவருளேயாகும்.

இக்கதையை அன்பினொடு படிப்பவர்கள்
அருள்பயன்கேட் டிடுவோர், மேன்மை
மக்கள்தமை உயிர்த்திடுவர் ; என்றென்றும்
ஒழியாத வாழ்வு சேர்வர் ;
மிக்கபெரும் சித்திகள்ஓர் இருநான்கும்
அடைவர் ; மனம்விழைத்த வெல்லாம்
அக்கணமே பெறுகுவர் ஈரேழ் உலகு
அதனினும் அவர்க்கு அரியதுஇன்றே

(திருக்கூவப் புராணம் செய் - 697)

அன்பன்

30.03.2006

திரு. அடிகளாசிரியன்.

உ
இறைவன் துணை

திருச்சிற்றம்பலம்

# திருநாளைப்போவார் திருக்காதை

ஆக்கியோன்
**திரு. அடிகளாசிரியன்**

**- காப்பு -**

நல்ல கணபதியின் நாள்தா மரையடியை
அல்லும் பகலும் அகத்திருத்தி - நல்ல
திருநாளைப் போவார் திருக்கதையைச் சொல்கும்
வருநாளை வாழ்வே வர

**குறிப்பு:**

நல்ல என்பது மங்கலச் சொல். சொல்கும் என்பது படர்க்கையாரையும், முன்னிலையாரையும் உளப்படுத்திய தன்மை பன்மை வினைமுற்று.

### நூல்

# திருநாளைப்போவார் திருக்காதை
# சான்றோர் வாழ்த்து

1. நாளைப் போவார் என்கின்ற
நல்ல தொண்டர் திருக்கதையைக்
காளைப் பெருமான் திருவருளைக்
கருத்தில் இருத்தி, மிகஆய்ந்தே
ஆளும் ஆரூர்ப் பெருமானை
அறிவார் நம்பி ஆண்டானைக்
கோளும் குன்றத் தூர்முனியைக்
குறித்தே வணங்கி உரைக்கின்றேம்.

2. நாட்கா லையிலே முகிழ்விரிந்து
நன்றாய் மலரும் தாமரைபோல்;
ஆட்பா லவரின் அருளாலே
அன்பு மலரும் அடியவருள்
நாட்கா லையிலே பணிதொடங்கும்
நாளைப் போவார் திருக்கதையைக்
கேட்பார் தமக்குச் சிவம்விளைய,
கிளத்து கின்றேம் சுவையாக

**குறிப்பு:**

மேலே வந்துள்ள இரண்டு பாடல்களும் நூலாசிரியனால் செய்யப்பட்ட தற்சிறப்புப் பாயிரமாகும். ‘தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் எய்த உரைப்பது தற்சிறப்பாகும்’ என்னும் நூற்பா விதியின்படி இந்நூலாசிரியனால் சான்றோர் வாழ்த்தாகிய தெய்வ வணக்கமும், திருநாளைப்போவார் என்ற செயப்படு பொருளும் என்னும் இரண்டும் தோன்ற உரைக்கப்பட்டன. இந்நூல் எழுவதற்குக் கருவாய் இருந்த சான்றோர் மூவர் என்க. அவர் நம்பிஆரூரனாரும். நம்பியாண்டார் நம்பிகளும், குன்றத்தூர் முனியாகிய சேக்கிழாரும் ஆவர் என்க. அக்காரணத்தினாலே இந்நூல் முகப்பில் அம்மூவரையும் தெய்வமாகக் கருதி சான்றோர் வாழ்த்து என்ற பெயரால் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து கூறப்பட்டது.

# நாட்டுச் சிறப்பு

**3.** சைவ சமய முதற்குருவாம்
சம்பந் தர்தான் உலகமெலாம்
உய்யப் பிறந்த நாடெதுவோ
என்றால், அதனை உரைப்பேம்கேள்;
தெய்வ அருளை முன்னிறுத்தித்
தேயம் எல்லாம் திருவளர
மையல் நீங்க இனிதாண்ட
மனுவாம் சோழன் வளநாடே.

**இப்பாட்டின் கருத்து:**

மக்களால் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற இடமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் எதுவோ அது நாடாகிய முதற்பொருளாகும். இவ்விடம் முதல், கரு, உரி என்ற மூன்றில் முதலாவதாக இருக்கும் என்க. இந்த இடத்திலே நன்மக்களும் தோன்றுவர். தீயமக்களும் தோன்றுவர். நாளைப்போவார் பிறந்த நாடு நன்மக்கள் தோன்றுவற்கு இடமாகும் என்பதை இப்பாடல் குறிக்கின்றது. சமயக்குரவராகிய திருஞானசம்பந்தர் பிறந்ததால் இந்நாடு சைவம் வளர்வதற்கு இடமாயிற்று. அரசியல் நீதியுடைய மனுநீதிச் சோழன் ஆண்டதால் சிறந்த அரசியல் நெறி வழங்குகின்ற நாடாக இது விளங்கிற்று. திருநாளைப்போவார் பிறந்தநாடு சைவ நெறியினாலும் அரசியல் முறையினாலும் சிறந்ததாய் விளங்குவதை இப்பாட்டு உணர்த்துகின்றது.

**இப்பாட்டின் முடிபு:**

திருஞானசம்பந்தர் பிறந்தநாடு எத்தகையதோ என்று வினாவினால் அது மனுநீதிச் சோழன் பிறந்த வளமான நாடாகும்.

4. பொன்னிப் புனல்தான் மிகப்பாய்ந்து
பொன்போல் நெல்லை விளைக்கின்ற
நன்னர் நாட்டை அறிஞரெலாம்
நல்ல புனல்நாடு எனநவில்வார்
மன்னும் சோழப் பெருநாட்டுள்
மாண்பார் இந்த புனல்நாடு
தன்னில் சிறந்த தமிழ்போலத்
தரணிக் கெல்லாம் இனிமைதரும்.

**இப்பாட்டின் கருத்து:**

பொன் சத்து நிறைந்த நீர் ஆதலால் பொன்னிப் புனல் என்று கூறப்பட்டது. பொன்னியாகிய காவிரி பாரத நாட்டில் உள்ள ஏழு ஆறுகளில் சிறந்த பேராறாகக் கூறப்படும். இது மேற்கு தொடர்ச்சி மலையில் தோன்றி கன்னட நாடு, தமிழ்நாடு இவற்றை எல்லாம் வளப்படுத்திக் கொண்டிருக்கின்ற சிறந்த ஆறு என்க. சிலப்பதிகாரம் "காவிரி என்னும் பொய்யாக் குலக்கொடி" என்று குறித்துள்ளது. அத்தகைய ஆறு பாய்ந்து சிறந்த

உணவுப்பொருளாகிய பொன் போன்ற நெல்லை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டுள்ளது. காவிரியையும் அதன் கிளையாகிய கொள்ளிடத்தையும் பொன்னி என்ற பெயராலேயே அறிஞர் வழங்குவர். சோழநாட்டுள் இப்பொன்னி ஆறு பாய்ந்து வளஞ்செய்யும் பகுதியை புனல்நாடு என்றுக் கூறுவர். இப்புனல்நாடு சொல் உலகத்தில் தமிழ் என்னும் மொழித் தோன்றி மக்களுக்கெல்லாம் இனிமை தருவது போல பொருள் உலகத்தில் இப்புனல்நாடு விளங்கி உலக மக்களுக்கு எல்லாம் இனிமையை தந்துகொண்டிருக்கின்றது என்னும் கருத்தை இப்பாட்டு உணர்த்துகின்றது.

**இப்பாட்டின் முடிபு:**

புனல்தான் மிகப்பாய்ந்து பொன்போன்ற நெல்லை விளைக்கின்ற நல்ல நாடு என்று அறிஞர் கூறுவர். அந்நாடு மொழி உலகில் தமிழ் தோன்றி மக்களுக்கு இனிமை தருவது போல தந்துகொண்டிருக்கின்றது. இனிமை, அகப்பொருள் இனிமையும், புறப்பொருள் இனிமையும் ஆகும். பொருள் இனிமை நிறைந்ததே சிறந்த மொழி என்க. அப்பொருள் இனிமைக்குத் துணையாக இருப்பது சொல் இனிமை ஆகும்.

5. நீரும் நிலனும் நன்கமைய
நேரந் தன்னில் நல்லுழவர்
ஏரின் உழுது எருஇட்டே
ஏற்ற நெல்லை விளைத்திடலால்,
ஊரில் உள்ள எல்லோரும்
உண்டு மகிழ்ந்து வாழ்வாரே;
பாரில் உள்ளோர் இந்நாட்டைப்
பசிநோய் இல்லா நாடென்பர்.

6. உழைப்பும் ஊக்கமும் உடையரெலாம்
ஒய்வே இன்றித் தொழில்செயலால்
தழைத்து வளர்ந்த பலபொருளும்;
தக்க பொருளின் சிறப்பாலே
பழிக்கும் வறுமை இல்லாத
பண்பார் நாடு இதுவென்றே
விழிக்கே ஒக்கும் புலவரெலாம்
விரும்பிப் புகழ்ந்தே உரைப்பாரே.

7. நல்ல உளத்தைப் பெற்றனராய்
நாளும் பசித்தே உண்டிடலால்
இல்லை யாகும் பிணியெல்லாம்;
இன்பாம் அன்பைப் பெற்றிடலால்,
தொல்லை நல்கும் பகையில்லை;
தொகுத்துச் சொல்லின் இந்நாட்டில்
அல்லல் நல்கும் பசிவறுமை
அழிக்கும் பிணிபகை அவைஇலையே.

**இப்பாடல்களின் கருத்து:**

மேற்கூறிய மூன்று பாடல்களும் நாட்டின் சிறப்பை உணர்த்தத் தொடங்கி நாட்டில் பசியும் வறுமையும் பிணியும் பகையும் இல்லை என்பதை காரணம் காட்டிக் கூறுகின்றன. அவற்றுள் முதல் பாட்டு உழவர் செய்கின்ற தொழிற் சிறப்பால் உணவுப் பொருள் நன்றாகத் தோன்றின. அதனை மக்கள் உண்டு நன்கு வாழ்கின்றனர் என்ற செய்தியைக் கூறுகின்றது. விளைத்திடலால் என்னும் மூன்றாம் வேற்றுமை தொழிற்சொல் காரக ஏது அணியில் வந்துள்ளது. மற்ற பாட்டிற்கும் இப்பொருளையே கொள்க. காரக அணியின் இலக்கணமாவது "யாதன் திறத்தின் இதனில் இது விளைந்தது என்று ஏது விதந்து உரைப்பது ஏதுவாகும்" என்பது தண்டியலங்காரம்.

**இப்பாடலின் முடிபு:**

இம்மூன்று பாடல்களும் ஏதுஅணியின்பாற்படும். இன்ன காரணத்தால் பசி இல்லை, இன்ன காரணத்தால் வறுமையில்லை, இன்ன காரணத்தால் பிணி இல்லை, இன்ன காரணத்தால் பகையில்லை என்பனவற்றைக் கூறுவதே ஏது அணியின்பாற்படும்.

8. வந்த விருந்தை நன்கோம்பி
வருநல் விருந்தை எதிர்நோக்கும்
அந்தம் செறிந்த அன்பரெலாம்
அறத்தைப் புரிந்து வாழ்வாரே
கந்தன் அனைய இளையரெலாம்
கலையார் கழகம் தனிற்புகுந்து
முந்த இருக்கும் வகையாலே
முறையாய்க் கல்வி பயில்வாரே.

**இப்பாட்டின் கருத்து:**

இந்நாட்டு மக்கள் தம்வீடு நோக்கி வந்த விருந்தினரை அன்பினாலே நன்கு உபசரித்துவிட்டு அதோடு அமையாமல் மேலும் வரும் நல்ல விருந்தினரை எதிர்பார்க்கின்ற உயர்ந்த வாழ்க்கையை உடையவர் ஆவர். இவர் விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கையினர் அல்லர். விருந்தினை ஓம்புதல் இல்லறத்திற்குரிய உயர்ந்த அறம் என்க. மற்று அந்த நாட்டிலுள்ள முருகப்பெருமானை ஒத்த இளைஞர் எல்லாம் தாம் கற்கும் கல்வியில் முதன்மையராய் இருக்குமாறு தலைமாணவராய் இருந்து கற்பர்.

**இப்பாட்டின் முடிபு:**

அன்பிற்கு உறுதுணையாய் இருக்கும் இல்லற தர்மத்தை செய்துவருவார் என்க. கந்தனை ஒத்த அழகும் அறிவும் வாய்ந்த இளைஞர் கலைகள் நிறைந்த கழகத்தில் புகுந்து முதன்மையாய்க் கற்பர் என்க.

9. அந்த நாட்டினில் திருப்புன்கூர்
என்கிற அரியநல் பதிஉண்டே;
இந்த நற்பதி மூர்த்தியும்
தீர்த்தமும் ஏற்றமாம் தலமாகும்;
சந்தம் பெற்றநல் மூவர்பாட்டு
உடையது காவிரி வடபாலே
வந்து அமைந்தது வாழ்வதற்கு
இனியது வளத்தினை உடைத்தம்மா.

**இப்பாட்டின் கருத்து:**

அந்தநாடு என்னும் சொல்தொடரில் அந்த என்கின்ற சுட்டுசொல் வெறும் சுட்டை மட்டும் உணர்த்தவில்லை. அவ்வாறு சிறந்தநாடு என்று பொருள்பட்டு சிறப்பை உணர்த்தும் இடைச்சொல்லாய் உள்ளது. இத்தகைய சிறந்த நற்பதி சிவலோகநாதர் ஆகிய அப்பனும், சொக்கநாயகி ஆகிய அம்மையும் சிறப்பாய் அமைந்த தலமாகும். கணபதி என்கிற பெயருடைய தீர்த்தத்தைப் பெற்றிருத்தலால் தீர்த்தமும் சிறந்த தலமாகும். இந்த நற்பதி சமயக்குரவர் மூவராலும் பாடப்பெற்றது. காவிரி நதியின் வடக்கும் கொள்ளிடத்திற்கு தெற்குமாய் உள்ளது. மக்கள் வாழ்வதற்கு இனிய இடமாய் இருப்பது. எல்லா வளங்களும் சிறந்தது.

அம்மா - என்பது வியப்பை உணர்த்துகின்ற இடைச்சொல் என்க.

**விளக்கம்:**

திருப்புன்கூர் என்பது சோழ நாட்டில் காவிரி வடகரை தலங்களில் ஒன்றென்க. இவ்வூரில் கணபதி என்ற பெயரால் அமைந்த ஒரு தீர்த்தம் உண்டு. தலவிருட்சம் புங்கமரம் என்கிற புன்க மரமாகும். இது வைத்தீஸ்வரன் கோவிலுக்கும், சீர்காழிக்கும் இடையில் உள்ளது.

10. அருளாம் சொக்க நாயகியும்
அன்பாம் சிவலோ கத்திறையும்
பொருளாம் பண்பும் பண்பியும்போல்
பொருந்தி இருந்து அருள்புரிவார்;
தெருளால் வணங்கும் தொண்டரெலாம்
தினமும் வந்து தொண்டுசெய்தே
மருளே நீங்க அருள்பெறுவர்
மன்னும் இந்த திருப்பதியில்.

**இப்பாட்டின் கருத்து:**

திருப்புன்கூர் என்ற திருப்பதியில் அருள் நிறைந்த சொக்கநாயகி என்னும் அம்மையும் அன்பு நிறைந்த சிவலோக நாயகனும் ஒரே பொருளில் அமைந்துள்ள பண்பும், பண்பியும் போல் கருதும்படி ஒருங்கே அமைந்து அத்தலத்தில் எழுந்தருளியிருந்து அருள்புரிவர் என்க.

இத்திருப்பதியில் இவரை வந்து வணங்குகின்ற அன்பரெலாம் மருள் நீங்க அருள் பெறுவர் என்க.

மருள் - மயக்க உணர்வு. இவ்வுணர்வு விபரீத உணர்விற்கும், ஐய உணர்விற்கும் காரணமாய் இருக்கும் இந்த மருள் நீங்கினால் தேற்றமான உண்மை உணர்வு உண்டாகும் என்க. மக்களெல்லாம் உண்மை உணர்வினாலே இறைவனை வழிபட்டு அருள் பெற்றார்.

## திருநாளைப்போவார் பிறந்த ஊர்ச்சிறப்பு

11. திருப்புன் கூரின் வடமேற்கே
திகழும் பதிதான் ஒன்றுண்டு;
அருப்பம் உடைய அப்பதிதான்
ஆதன் ஊரென்று பெயர்பெறுமே;
விருப்பம் உடைய அவ்வூரில்
விளங்கும் புறம்பார் பணைதன்னில்
இருப்பர் புலையாம் குடிமக்கள்;
இவர்தம் தொழில்கள் பற்பலவே.

**இப்பாட்டின் கருத்து:**

ஆதன் என்பான் பெயரால் அமைந்த ஊர் ஆதனூர் என்க. அவ்ஊருக்கு புறம்பே பொருந்தியுள்ள பெரிய நிலப்பகுதி புறம்பார் பணையாகும். அப்புறம்பார்

பணையில் புலைமக்கள் வாழ்ந்திருப்பர். இவர் பல பிரிவினர் ஆவர். இவருடைய தொழில்களும் பலவாக இருக்கும். தமிழகத்தில் உயர்குடியினர் என்றும், புலைக்குடியினர் என்றும் இருபிரிவினர் வாழ்ந்து வந்தனர். அவருள் புலைக்குடியினர் பாணன், கடம்பன், துடியன், பறையன் என நான்கு பிரிவினராக வாழ்ந்து வந்தனர். அவருள் பாணர் யாழ் வாசிப்பவராய் இருந்து உயர்குடி மக்களுக்கு எல்லாம் உதவியாய் பணிபுரிந்து வருவர். பாணன் அகப்பொருள் நிகழ்ச்சியில் இலக்கியங்களில் வந்துள்ளமையை காணலாம். கடம்பர் மத்தளம் கொட்டுபவராகும். இவரை மிருதங்கன் அல்லது மதங்கன் என்று வழங்குவர். இவருடைய மகளிர்கள் மெய்ப்பாடு தோன்ற பாடி நடிக்கும் விறலியர் ஆவர். துடி என்கின்ற உடுக்கையைக் கொட்டுபவர் துடியராவர். இவர்கள் உயர்குடி மக்களுக்குரிய தெய்வ வழிபாடு முதலான நிகழ்ச்சிகளிலும், அரசருக்குப் போர் நிகழ்ச்சியிலும் தம்முடைய துடியைக் கொட்டுபவராக இருப்பர். பறையர் என்பவர் பறை கொட்டுபவர். இப்பறை சிறுபறை. பெரும்பறை என்று இரு வகையாக இருக்கும். பறை கொட்டுதல் பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியத்தில் வந்துள்ளமையை அறிக. அப்பொழுது உயர்குடியில் பிறந்த சிறுவர்களின் விளையாட்டாக இருந்தது.

# திருநாளைப்போவார் பிறந்த குடிச்சிறப்பு

12. பொய்யே நினையார் மெய்யுண்டு,
புலாலை இவர்கள் புசித்தாலும்,
கையால் கோலால் அடித்திசைக்கும்
கலையின் தொழிலில் பெரியாரே;
மெய்யாய் இவரைப் புலையரென்றே
மேவ உரைக்க மாட்டேமால்;
துய்யாம் கலைஞர் இவரென்றே
தோன்ற உரைத்து மகிழ்வேமே.

**இப்பாட்டின் கருத்து:**

உலகத்தார் புலைக்குடி என்று வழங்குகின்ற இவரை அவருடைய தொழில் சிறப்பு நோக்கி கலைக்குடியினர் என்றே வழங்க விரும்புகின்றேன். அவரின் கலைச்சிறப்பு எத்தகையது என்று வினவினால் நரம்பு, தோல் இவற்றால் படைக்கப்பட்ட பலவகை வாத்தியங்களைத் தங்கள் கையினாலும், தகுதியான கோல்களாலும் அடித்து இனிய நாதத்தை உலக மக்களுக்கு அளித்து மகிழ்விப்பர். அக்காரணத்தினால் இவரை புலால் புசித்தாலும் புலைக்குடியினர் என்று கூறமாட்டேன். சிறந்த கலை ஒன்றையே கருதி கலைக்குடியினர் என்று பெயரிட்டு அழைத்து மகிழ்வோம்.

13. அந்த புலையர் சேரிதனில்
அணியாம் பாணர் கடம்பரொடு
சந்தப் பறையர் துடியரிவர்,
சதுராய் வாழ்ந்து வந்தனரே;
இந்த இவர்க்குத் தலைவராய்
இசையார் வள்ளுவர் இருந்தாரே;
நந்தும் இவர்தான் புலைக்குடிக்கு
நல்ல குருவாய் இருப்பாரே.

**இப்பாட்டின் கருத்து:**

அந்த புறச்சேரியில் பாணரும், துடியரும், கடம்பரும், பறையரும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த இவர்க்கு புகழ்மிகுந்த குருவாக வள்ளுவக்குடியினர் விளங்கினார். வள் என்றால் சொல்லுதல் என்று பொருள். 'வாள்' என்ற சொல் வள் என்று வழங்கிற்று. வாள் என்பதற்குச் சொல்லுதல் என்பது பொருளாகும். இக்குடியினர் புலைக்குடியினருக்கேயன்றி உயர்ந்த குடிமக்களுக்கும் நன்மை தீமைகளை ஆராய்ந்து கூறுவர். சோதிடக் கலையிலும் மிக வல்லவராய் இருப்பர். அரசர்க்கும் பட்டாபிடேகம் முதலான விசேட நாட்களை அரச சின்னங்களை அணிந்துகொண்டு பட்டத்து யானையின் மீது அமர்ந்து முரசறைந்து எல்லா மக்களுக்கும் அறிவிப்பர்.

**குறிப்பு:** தாழ்ந்த குலத்தோர் நால்வகையினர் அவர் பாணர், துடியர்,கடம்பர், பறையர் எனப்படுவர்.

# திருநாளைப்போவார் தோற்றம்

14. பாணர் குடியில் நலமுடைய
பாண னுடைய மனையாட்கு
மாணும் மகவு தோன்றிற்று
மாண்பார் ஞாலம் நலம்பெறவே
ஏணும் இந்த நல்மகவின்
எழிலும் தோற்ற மேம்பாடும்
காணக் கண்ட எல்லோரும்
களித்துக் கண்டு மகிழ்ந்தனரே.

**இப்பாட்டின் கருத்து:**

ஒரு நல்ல பாணன் குடியில் ஒரு நல்ல பாணனுக்கும், ஒரு நல்ல பாணிச்சிக்கும் இறைவன் திருவருளால் அழகான குழந்தை ஒன்று நல்ல நாளிலே தோன்றிற்று. அக்குழந்தையின் அழகு, தோற்ற மேம்பாடு முதலானவற்றை எல்லாம் உலக மக்கள் கண்டு இன்புற்றனர்.

15. சேற்றில் பிறந்த தாமரைப்போல்
சிறப்பில் குடியில் செனிமகவின்
தோற்றம் கண்ட உலகரெலாம்
துன்னும் இந்த மகவாலே
தேற்றம் மிகுந்த சைவநெறி
தேய மெலாம் மிகவளரும்
நீற்றின் பெருமை நிலைத்திருக்கும்
என்றே நினைத்து மகிழ்ந்தாரே

**இப்பாட்டின் கருத்து:**

சிறப்பில்லாத குடியிலே சேற்றில் பிறந்த தாமரையைப்போல் பிறந்த மகவின் அழகான தோற்றத்தை கண்ட உலக மக்கள் எல்லாம் இந்த குழந்தையினால் சிவபெருமானுடைய திருநீற்றின் பெருமை உலகமெலாம் விளங்கி நிற்கும் என்று எண்ணி உவந்தனர்.

**குறிப்பு:** 'செனி மகவு' இறந்தகால வினைத்தொகை.
'செனித்த மகவு' என விரியும். செனித்தல் - பிறத்தல்.
'செனித்தல்' என்பது வடசொல்.
'சிறப்பு இல் குடி' என விரித்துக் கொள்க
சிறப்பு இல்லா புலையர்குடி என்பது பொருள்.

16. அந்த சேரி தனில்வாழும்
அறிவார் வள்ளுவக் குருதானும்
இந்த குழந்தை எழில்நோக்கி
இனிய நந்திதனை நினைந்து
நந்தும் நந்தன் எனவழைத்தார்;
நல்ல பெயராய் அமைந்ததுவே,
சந்தம் மிகுந்த அம்மகவு
சான்றோ னாக வளர்ந்ததுவே.

**இப்பாட்டின் கருத்து:**

அந்த சேரியிலேயே உடன் வாழ்ந்திருக்கும் அறிவு நிறைந்த குரு ஒருவர் இம்மகவினுடைய ஆன்ம எழிலை நோக்கி தங்கள் குலத்திற்கெல்லாம் முதலாய் இருக்கின்ற நந்தியம் பெருமானை மனதிலே நினைத்துக் கொண்டு நந்தி என்கின்ற சிறந்த பெயரைப் பெயராகக்கூறி அழைத்து மகிழ்ந்தார். அக்குழந்தைக்கு அப்பெயரே காரணப்பெயராய் விளங்கி நல்ல பெயராக அமைந்துவிட்டது. அக்குழந்தை புலையனாக வாழாமல் நல்ல சான்றோனாக வாழ்ந்திருந்தது.

17. புலையாம் பண்பு பொருந்தவில்லை
புனிதர்ப் பண்பே பொருந்திற்று
நிலையாய் இசையின் கலைபயின்று
நீண்ட யாழைக் கரத்தேந்தி
தலையாம் அன்பால் சிவந்தனையே
தமிழால் பாடி மகிழ்ந்திருக்கும்
அலையா நின்ற மனத்தையெல்லாம்
அடக்கி வாழும் அக்குழந்தை.

**இப்பாட்டின் கருத்து:**

உலகப் பொருள்களில் சென்று அலைந்து திரியும் மனத்தை தனக்கு ஏற்பட்ட பரிபக்குவ நிலையால் அடக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றது அக்குழந்தை. புலையர் சேரியிலே, புலையர் குடிக்குள்ளே, புலையர் வீட்டிலே பிறந்த அம்மகவுக்கு இறைவன் திருவருள் சிறப்பால் புலைப்பண்பே சிறிதும் இல்லையாயிற்று. அக்குழந்தை இறைவன் மீது கொண்ட தலையன்பால் இறைவனைப் பற்றிய இசைப்பாடல்களை தமிழாலே பாடி மகிழ்ந்து கொண்டிருக்கும்.

## வேறு

18. அன்பான நண்பர்தமை ஒன்றாய்க் கூட்டி
அன்னவரின் துணையாலே ஆர்வம் தோன்ற
இன்பான நற்றொண்டை நந்தன் செய்தார்
இவ்வுலகின் ஆலயங்கள் தோறும் சென்றே
துன்பான புல்புதர்கள் தம்மைப் போக்கி
துரிசுபல துன்னியிடில் அவற்றை நீக்கி
முன்பான திருத்தொண்டை முற்றும் செய்தார்
முதல்வன்தன் திருவருட்கு முழுது மானார்.

**இப்பாட்டின் கருத்து:**

நந்தன் தன் உள்ளக் கருத்திற்கு ஒத்த நண்பர்களாகப் பார்த்து அவர்களை ஒன்று திரட்டி அவர்களைக் கொண்டு தொண்டு செய்யத் தொடங்கினார் என்க. எவ்வாறு செய்தார் எனில் செயலுக்கு முதலாக தோன்றிய அன்பில் ஆர்வமே வளரும்படி செய்தார் என்க. என்னவென்ன செய்தார் எனில் ஆலயங்கள் தோறும் சென்று அங்கே வழிபடுகின்றவர்களுக்கு வழிபட முடியாமல் துன்பத்தை தருகின்ற புல்லையும், புதரையும், பல பூண்டையும் நீக்கித் தொண்டு செய்தார் என்க.

19. தம்ஊரின் அருகிலுள்ள திருப்புன்கூர் சிவனைத்
தரிசிக்க இவர்சென்றார் சிவனார் முன்பில்
கொம்மையுறு நந்தியுரு குறுக்காய் நிற்ப
கும்பிடற்கு முடியாமல் குழைந்து நின்றார்
செம்மைபெறு மித்தொண்டர் சேவிக்க வேண்டி
சிறிதளவு விலகுஎன சிவனார் சொன்னார்
இம்மைபெறு பயனென்றே இனிதாய் எண்ணி
இறையவனைத் தொழுதேத்தி அருள் பெற்றாரே.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

**குறிப்பு:** இந்த நிகழ்ச்சி உண்மை அடியவர் கோயிலுள் சென்று வழிபாடு செய்வதற்கு தடையாக இருக்கக் கூடாது என்பதை அறிவுறுத்துகின்றது. இந்த நிகழ்ச்சி - எழுவாய்

**20.** திருக்கோயில் அருகிலொரு சிறுகுட்டை இருப்பச்
சிறந்ததிருக் குளமாகச் செய்தார் நந்தன்
அருகிலொரு மலர்த்தோட்டம் அழகாய்த் தோற்றி
ஆண்டவன்தன் திருவடியை அழகு செய்தார்
பெருமைமிகு திருப்புன்கூர் தலத்தை நன்கு
பேணியே தூய்மைபெறு தொழில்கள் செய்தார்
அருமைபெற இவர்செய்யும் பணியைக் கண்டே
அவனியெலாம் பேருவகை அடைந்த தம்மா.

**இப்பாட்டின் கருத்து:**

நந்தன் கோவில் அருகே சிறுகுட்டை ஒன்று இருப்ப அதனைத் தோழரின் துணைகொண்டு நல்ல தீர்த்தக் குளமாய்ச் செய்தார். அத்தீர்த்தத்தின் அண்மையிலேயே அழகான நந்தவனம் அமைத்து அதில் பலவகை மலர்களைத் தோற்றுவித்தார். அந்நந்தவனத்தில் மலர்கின்ற பூக்களைக் கொண்டு இறைவனின் ஒவ்வொரு உறுப்புகளையும் அழகு செய்தார். மேலும், பெருமை மிகுந்த திருப்புன்கூர் என்ற தலத்தை நன்கு பாதுகாத்து தூய்மையடையும்படி செய்தார். இவர் செய்துவரும் பணியை உலக மக்களெல்லாம் கண்டு அளவற்ற பெருமகிழ்ச்சியை அடைந்தார் என்க.

# வேறு

21. பேறாய் உள்ள பேரறிவாம்
பிறவா இறவாப் பரமனிடம்
மாறா உயர்ந்த அன்புவந்தால்,
மாண்பார் பத்தி ஆகிடுமே;
நீறார் மேனி நிமலனிடம்
நீண்ட அன்பர் செய்பத்தி
தேறார் நீர்போல் தெளிவுதர
திருவை விளைத்து நின்றதம்மா.

**இப்பாட்டின் கருத்து:**

அன்பு என்னும் பக்தியின் இயல்பும் அப்பக்தி திருநாளைப் போவாருக்கு தோன்றி பயன் விளைத்ததையும் கூறுகின்றது இப்பாட்டின் கருத்து. பரமனிடம் மாறா உயர்ந்த பக்தி வந்தால் மாண்பார் பக்தியாகும். பக்தி செய்யப்படும் பரமனின் இயல்பை இப்பாட்டின் முதற்பகுதி கூறுகின்றது. பேறாய் உள்ள பரமனிடத்தில் மாறாத பக்தி தோன்றினால் அதுதான் அவ்வுயிர்க்குப் பயன்தரும் பக்தியாகும். பேறாய் உள்ள பொருள் எது? ஆன்மாவுக்கு ஆன்மா பேறாகாது ஆன்மாவுக்கு பேறா இருப்பது அகன்ற சிவம் என்க. அது பிறவாதது இறவாதது அத்தகைய பேரறிவுப் பொருளுடன் ஒருவர் மா'றாத பேரன்பு கொள்ள வேண்டும் என்க. இதனை சிவஞான போதம் "அயரா அன்பு" என்று கூறும்.

திருநீறணிந்த இறைவனிடம் நாளைப்போவார் செய்த பக்தி மாறாத பக்தியாய் விளங்கி . அவரின் உள்ளத்தை தேற்றாங் கொட்டையால் தேற்றப்பட்டநீர் சேறு நீங்கி தெளிவடைதல் போல ஒரு நல்ல தெளிவைக் கொடுத்தது. எனவே, இப்பக்தியினால் நாளைப்போவாருக்கு நல்ல தெளிவு கிடைத்துள்ளது.

**22.** சேக்கிழார் புராணம் செய்த
சிறந்தபே ரறிஞ ரான
ஊக்க மாம்உமா பதிப்பேர்
உயர்ந்தவர் நந்த னாரை
ஆக்கம்சேர் இலிங்கம் போற்றும்
அடியவர் இல்லில் வாழ்வார்,
மேக்குறும் இசைவல் லாளர்,
மெல்லிய நீசர் என்பார்.

**இப்பாட்டின் கருத்து:**

சேக்கிழார் புராணம் செய்த சிறந்தவராகிய உமாபதிசிவனார் திருநாளைப் போவாரின் வரலாற்றுச் செய்தியைக் குருலிங்க சங்கமம் என்னும் மூன்றுள் இலிங்கத்தைப் போற்றுகின்ற அடியவர் என்றும், இல்லறம் துறவறம் என்னும் இரண்டுள் இல்லறத்துள் வாழ்பவர் என்றும், இசைப்பாடுவதில் வல்லவர் என்றும் தாழ்ந்த நீசகுலத்தவர் என்றும் நான்காகக் கூறுகின்றார்.

**குறிப்பு:** எண்ணிடைச் சொல்

23. நாளைப் போவார் முதலானோர்
நலியும் குற்றம் செய்திடினும்
கேளைப் போலப் பொறுத்திடுவாய்
கீழோன் பிழையைப் பொறுஎன்றே
தாளைப் பாடும் ஆரூரர்
தாமே உரைப்பர்; ஆனாலும்,
நாளைப் போவார் செய்தபிழை
நமக்குச் சிறிதும் தெரியாதே.

**இப்பாட்டின் கருத்து:**

சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் நந்தனாரை செம்மையே திருநாளைப்போவார் என்று சிறப்பாகக் கூறி இவரது செம்மையைப் புலப்படுத்தி இருந்தாலும், நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் என்ற திருப்பதிகப்பாட்டில் குற்றம் செய்தவர் வரிசையில் திருநாளைப்பேவாரை வைத்துப் பாடுகின்றார். ஆனால், நமக்கு திருநாளைப்போவார் செய்த குற்றம் இன்னதென்பது புலப்படவில்லை.

## திருநாளைப்போவார் செய்துவரும் திருத்தொண்டின் பெருமையறிந்து தில்லைவாழ் அந்தணராகிய சான்றோர் தில்லைப்பதியின் புறத்தொண்டிற்கு அழைத்தல்

**24.** தில்லைவாழ் அந்தணர்தாம் இவர்தொண்டைக் கேட்டே
தில்லையிலும் இவர்தொண்டு சிறக்க எண்ணி
வல்லைவர அழைத்திட்டார்; அழைப்புக் கேட்டே
வரம்பிலாப் பேருவகை அடைந்தார் நந்தர்
எல்லையிலா அன்புடனே சென்ற நந்தர்
இதற்குரிய அந்தணரைக் கண்டு பேசி
ஒல்லையினில் அப்பணியை ஏற்றுக் கொண்டார்
ஒழுங்காக நாட்காலைப் பணிக்குச் செல்வார்.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

# நந்தனார் நாளைப்போவார் ஆனது

25.நாள்தோறும் நாட்காலை பணிக்குச் சென்றே
நாதனார் நற்றொண்டை நன்றாய்ச் செய்தார்
ஆள்மிகுந்த அவர்செயலை உலகோர் கண்டே
அதிசயித்த மக்களெலாம் ஆர்வம் தோன்ற
நாள்போகும் தொண்டரென நன்கு போற்றி
நாளைப்போ வார்எனவேப் பேர்வைத்தார்
தாள்மிகுந்த அவர்தமக்குத் தக்க பெயராய்
தரையெல்லாம் வழங்கிற்று தழைக்க நன்றாய்.

**இப்பாட்டின் கருத்து:**

காலத்தை வரையறைப்படுத்திக் கூறும் தமிழறிஞர் அந்திக்காலத்தை 'நாள் அந்தி' என்றும் அல்கந்தி என்றும் இருவகையாகக் கூறுவர். இங்கே நாள் என்கின்ற சொல் கதிரவன் ஒளித்தோற்றத்தைக் குறிக்கின்றது. ஞாயிறு உதித்து ஒளிவீசத் தொடங்கும் காலம் நாட்காலையாகும். இறைவன் பணி செய்யத் தொடங்கும் திருநாளைப்போவார் ஒவ்வொரு நாளும் நாட்காலையிலே வேலை செய்யும் இடத்திற்குப் புறப்பட்டு தம் பணியைத் தொடங்குவார். இதனைக் கண்ட மக்கள் அதிசயித்து இவரை நாளைப்போவார் என்ற பெயர் வைத்து வழங்கத் தொடங்கினர். அப்பெயரே அவருக்குத் தகுதியான பெயராயிற்று.

# திருநாளைப்போவார் செய்த புறத்தொண்டு

26. தில்லைக் கோயில் புறமெல்லாம்
திருவே திகழ்ந்து சிறந்திருக்கக்
கல்லை முள்ளைக் கடிதகற்றிக்
கடின நிலத்தைச் சீர்திருத்தி
மெல்ல நடக்கும் முதியோர்க்கும்
மேவ நன்றாய் நடக்கும்வணம்
நல்ல இடமாய்ச் செய்தமைத்தார்
நாளைப் போவார் எனுந்தொண்டர்.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

27. கங்கைக் குளத்தைக் கடிதகழ்ந்து
கரையை நன்றாய் அழகுசெய்து
சங்கும் மீனும் தாமரையும்
சார்ந்து வாழும் இடமாக்கி
எங்கும் தொண்டர் தலைமுழ்கி
ஏதும் இடமாய்ச் செய்தமைத்தார்;
பொங்கும் அன்பே உருவாகி
பொலியும் திருநா ளைப்போவார்.

**இப்பாட்டின் கருத்து:**

**"நிலத்திற்கு அணிஎன்னும் நெல்லும் கரும்பும்
குளத்திற்கு அணிஎன்ப தாமரை"**

என்னும் நான்மணிக்கடிகை பாடலால் குளத்திற்கு தாமரை அழகு செய்தலை உணர்க. அத்தாமரை மலருடன் சங்கும் மீனும் வாழ்ந்து வருவது குளத்திற்கு சிறப்பைத் தரும். அக்குளத்தில் அடியவரெல்லாம் பவப்பிணி நீங்க உடம்போடு குளிக்காமல் தலையோடு குளிப்பர் என்க.

**"காய்ந்தது எனினும் தலையொழிந்து ஆடாரே
ஆய்ந்த அறிவினர் அவர்"**

காய்ந்தது - காய்ச்சல் அடித்தல்.

**குறிப்பு:** காய்ந்தது எனினும் தலை ஒழிந்து ஆடாரே ஆய்ந்த அறிவினர் - என்னும் விதியால் தலைமுழ்கி எனக் கூறப்பெற்றது.

28. தில்லை நகரைப் புறஇடத்தைத்
தினமும் தூய்மை செய்திட்டே
நல்ல மேலாம் சிவஉலகம்
நண்ணும் இதுவே எனக்கருதி
அல்லும் பகலும் மிகஉழைத்தே
அழகு செய்தார்; இவர் தொண்டை
தில்லைப் பெருமான் திருவுளத்தில்
திகழ எண்ணி மகிழ்ந்திட்டார்.

**இப்பாட்டின் கருத்து:**

திருநாளைப்போவார் தில்லைநகரைச் சிவஉலகம் என்றே கருதிக் கொண்டு அது தூய்மையாகும்படி நல்ல நல்ல பணிகளை எல்லாம் செய்து வந்தார். இவர் செய்துவரும் அரிய தொண்டின் சிறப்பை இறைவனும் உணர்ந்து மகிழ்ந்தார்.

## திருநாளைப்போவார் இசைத் தொண்டு

29. நல்லோர் ஆகும் நம்தொண்டர்
நாதன் கோவில் புறத்தொண்டை
எல்லி முழுதும் செய்திடுவர்
எல்லி கழிந்த பிற்பாடு
அல்லி தன்னில் உணவுண்டே
அரிய யாழைக் கையேந்தி
வல்ல வாறு இறைவன்மேல்
வண்ணப் பாட்டை வழங்கிடுவர்.

**இப்பாட்டின் கருத்து:**

எல் - சூரிய ஒளி அது விளங்கி இருக்கும் பகற் காலத்தை எல்லி என்ற பெயரால் வழங்குகின்றோம்.

அல் - என்றால் இருட்காலம் அது நிகழும் இரவுக் காலத்தை அல்லி என்ற பெயரால் வழங்குகின்றோம். எனவே, எல்லி என்பது பகற்காலத்தைக் குறிக்கும். அல்லி என்பது இரவுக் காலத்தைக் குறிக்கும் என்க. எனவே, இவர் பகற்காலம் முழுவதும் இறைவனுடைய புறத்தொண்டை செய்து வருவார். அது நீங்கி இரவுக்காலம் வந்ததும் தம்முடைய 'யாழை' கையிலே எடுத்துக்கொண்டு இறைவனைப்பாடி மகிழ்வார். அவர் பாட்டை மக்கள் கேட்டு மகிழ்வர். எனவே புறத்தொண்டு, இசைத்தொண்டு என்ற இரண்டையும் இறைவனுக்குச் செய்துவந்தார் என்க.

**குறிப்பு:** எல்லை உடையது எல் என்க
அல்லை உடையது அல் என்க

30. அண்டை உள்ள எல்லோரும்
அந்த பாட்டைச் சுவைத்திடுவார்
கண்டம் கரிய பெருமானும்
கருதி மிகவும் விரும்பினராய்
கொண்ட முருகன் இளநாவால்
கூறும் மொழிபோல் கொண்டிடுவார்
தொண்டர் செய்யும் இசைத்தொண்டும்
துலங்கி நின்றது இவ்வுலகில்.

**இப்பாட்டின் பொருள்:**

திருநாளைப்போவார் பாடிவருகின்ற அத்தகைய இசைப்பாட்டை அருகில் உள்ள எல்லா மக்களும் கேட்டு மகிழ்வர். இவர்களுக்கு மேல் இறைவனும் தன்னுடைய இளைய மகன் முருகனுடைய மதலை மொழியைக் கேட்பது போல கேட்டு மகிழ்வர். எனவே அவருடைய இசைத்தொண்டும் நன்கு நிகழ்ந்தது.

# தொண்டர் மனக்கவலையுற்றிருந்த செயல்

## தொண்டரின் மனக்கவலை

31. தில்லைக் கோயில் புறத்தொண்டை
தினமும் நன்றாய்ச் செய்திடினும்
ஒல்லும் கோயில் உட்புகுந்து
ஒன்றும் செய்ய முடியவில்லை
நல்ல பெருமான் முன்னின்று
நன்கு வணங்க முடியவில்லை
புல்லும் புலையைப் போக்கென்றே
புலம்பி அழுவார் நம்தொண்டர்.

**இப்பாட்டின் பொருள்:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

# மதங்கம் என்னும் சிவாகமம் கூறும் செய்தி

32. உயிர்ஒன் றிற்கே அறம்முதிர்வால்
உயர்ந்த சத்தி பதித்திடுமே
அயர்வொன் றின்றி அச்சக்தி
ஆசான் அருளைக் கூட்டுவிக்கும்
மயர்வு நீக்கி அன்னவர்க்கு
மன்னும் குருதான் அருள்செய்வான்
நயர்வாம் இந்த நிலைதனிலே
நாதன் இவரை இயக்கிவிடும்.

**இப்பாட்டின் கருத்து:**

உயிர் ஒன்றிற்குச் சிவபுண்ணிய முதிர்வால் இறைவனுடைய திருவருள் சத்தி பதிந்தால் அச்சத்தி பதியவே அது அருள் செய்யும் ஆசானை மாணவனுக்குக் கூட்டிவிடும். அந்த சமயத்தில் ஆசிரியன் மாணவனுக்கு அருள் உபதேசங்களைச் செய்வார். அன்பு கலந்த இந்த நிலையில் இறைவன் ஆசிரியன், மாணவன் என்கின்ற இருவரையும் பற்றி நின்று அடைந்து இயக்கும் என்க.

**குறிப்பு:** இவரை (பன்மை) - ஆசிரியனையும்,
மாணாக்கனையும் குறிக்கும்.

## கனவில் தோன்றி இறைவன் கூறியது

**33.** இருவர்தம் இடத்தும் எய்தி
இறைவனே இயக்கும் என்றே
மருவுறும் மதங்கம் கூறும்
மன்னுமிவ் விதிக்கு ஏற்ப
உருஅரு இல்லா ஈசன்
உருவினை உடைய னாகி
மருவிநின் றிருவர் கட்கும்
மாசறு மொழியைச் சொன்னான்.

**இப்பாட்டின் கருத்து:**

பக்குவநிலையில் இறைவன் ஆசிரியன், மாணவன் என்னும் இருவரிடத்திலும் சென்று அவரை இயக்கும் என்று மதங்கம் என்கின்ற ஆகமம் கூறும். அந்த சிவாகம விதிப்படி உருவமும் அருவமும் இல்லாத இறைவன் ஓர் உருவினைப் பெற்றுக் கொண்டு கனவில் தோன்றி குற்றமற்ற நன்மொழிகளை இருவருக்கும் கூறத் தொடங்கினார்.

**மேற்கோள் பாட்டு:**

இருவர்தம் இடத்தினும் இறைஇ யக்குவன்
அருளருள் செய்பவற்கு அடங்கு நற்செயல்
பரிவொடும் அருள்செயப் படும் அவர்க்கிவர்
மருவரும் யோகமோ அரிது மண்ணியே

- (சதமணிமாலை 62).

## தில்லைப்பெருமான் இருவரையும் இயக்கியது

34. தில்லைப் பெருமான் தமைப்போற்றும்
திருவார் கனவில் தாம்சென்றே
நல்ல கருதும் அந்தணரே
நாளைப் போவான் நம்தொண்டன்
வல்லே தீட்சை பலசெய்து
வந்தே எம்மை வணங்குதற்கு
ஒல்லை அழைத்து வருக
இதுஉறுதி உறுதி எனவுரைத்தான்.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

**குறிப்பு:** வல்லை - விரைந்து
உறுதி, உறுதி - அடுக்குச்சொல் தேற்றத்தில் வந்துள்ளது.

35. தொண்டர் கனவில் இறைதோன்றி
தூய மறையோர் தம்மிடத்தே
கொண்ட தீட்டை பெற்றீராய்
எம்மை வணங்க வருவீரே
மண்டும் உலக நெறிமாற்றி
மன்னும் தெய்வ நெறிவகுக்கக்
கண்ட செய்கை இதுவாகும்
கருத்திற் கொண்டு நடப்பீரே.

**இப்பாட்டின் கருத்து:**

இறைவன் தொண்டருடைய கனவிலே தோன்றி தொண்டரைப் பார்த்து நீர் தில்லை தீட்சிதரிடம் சமயம் முதலான தீட்சைகளை எல்லாம் செய்துகொண்டு எம்மைக் கண்டு தரிசிக்க வருவீராக. யாம் கூறிய இந்நெறி இதுவரை உலகத்தில் நிகழ்ந்திருந்த விதிகளை மாற்றிவிட்டு வேறொரு வழியாகிய தெய்வ நெறியைப் பின்பற்றுவதற்கு உங்கட்கு கூறியதாகும் என்று கூறினார்.

**36.** தில்லை வாழும் அந்தணர்தாம்
திரண்டு ஒன்றாய்க் காலையிலே
நல்ல இரவில் தாம்கண்ட
நல்ல கனவை நினைத்தனராய்
ஒல்ல ஒருவர் ஒருவரிடம்
உரைத்தார்; எல்லோர் கனவுகளும்
புல்ல ஒன்றாய் இருந்ததுவே!
புதுமை புதுமை எனவியந்தார்.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

**37.** இந்த நிலையில் நந்தனார்
இரவில் கண்ட தம்கனவை
சொந்தம் ஆன அந்தணர்க்குச்
சொல்லி அனுப்பி வைத்தாரே;
இந்த மொழியைக் கேட்டவுடன்
ஈசன் செயல்தான் இதுவென்றே
தம்தம் அறிவில் இறைஉணர்த்த
தலைவன் அருளை உணர்ந்திட்டார்.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

## குருவாகிய தில்லைதீட்சிதர் செயல்

**38.** இறைவன் அருளால் இயங்கலன்றி
எமக்கோர் இயக்கம் இல்லையென்றே
நிறைய உணர்ந்த அந்தணர்தாம்
நிமலன் நினைவை நன்குணர்ந்து
அறிவார் அறியும் நெறிக்கெல்லாம்
ஆதி ஆகும் எம்பெருமான்
நெறியே செய்வோம் எனக்கருதி,
நிகழ்ச்சி தன்னைத் தொடங்கினரே.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

**39.** அன்பார் நாளைப் போவாரை
அழைத்தே நோன்பு கொளச்செய்தார்
நன்பாம் சமயம் முதலான
நல்ல தீட்சை பலசெய்தே
துன்பாம் புலையை நீக்கினராய்
தூய மறையோன் தானாக்கி
இன்பாம் கூத்தன் தனைப்போற்ற
எல்லாச் சொல்லும் சொலவைத்தார்.

**இப்பாட்டின் கருத்து:**

இறைவன் திருவருளால் இயங்கத் தொடங்கிய தில்லை தீட்சிதர் அன்பு பொருந்திய திருநாளைப்போவாரை தம்மிடம் அழைத்து அவரை நோன்புகள் பல இருக்கச் சொல்லி அவை முடிந்ததும் சமய தீட்சை முதலான உயர்ந்த தீட்சை எல்லாம் அவருக்கு செய்து வைத்தார். இச்சிறந்த சிவசடங்கால் அவருடைய புலைத்தன்மை போக்கி தூய மறையோன் ஆக்கி இறைவனை வழிபடுவதற்கு ஏற்ற முறைகளை எல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

**மேற்கோள்:**

நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் - பாடல் 37. "புலையடித் தொண்டனைப் பூசுரன் ஆக்கி" எனக் கூறியதைக் கருத்திற் கொண்டு இச்செய்திகள் கூறப்படுகின்றன.

**40.** முன்னைப் பொருட்கு முன்னான
முதல்வன் அருளும் அருள்தன்னால்,
கன்னித் திங்கள் உரோகணியில்
ககனம் ஒளியால் விளங்கிநிற்க,
உன்னும் தில்லை அந்தணர்தாம்
உணர்வின் நாளைப் போவாரை
பின்னே கொண்டு முன்நடந்தார்
பெருமான் கோயில் தனைநோக்கி.

**இப்பாட்டின் கருத்து:**

எல்லா முதல் பொருட்கும் முதலாய் இருக்கின்ற இறைவனுடைய அருளை முதலாகக் கொண்டு கன்னித் திங்களாகிய புரட்டாசி மாதத்தில் உரோகணி நாள் நிகழும்போது வானம் ஒளி பெற்றிருக்கும் அக்காலத்தில் தில்லை தீட்சிதராகிய அந்தணர் எல்லாம் நடராச பெருமானையே கருதியிருக்கும் உணர்வினராகிய திருநாளைப்போவாரைத் தம்பின் அழைத்துக்கொண்டு ஆலயத்தை நோக்கி முன் நடந்தார் என்க.

**குறிப்பு:** ஆசிரியர் மாணவரை இறைவனிடம் அழைத்துக் கொண்டு போகும்பொழுது ஆசிரியர் முன்னேயும் மாணவர் பின்னேயும் செல்லுதல் மரபு என்க. ஆசிரியருடன் மாணாக்கன் நடந்தான் என்னும் சொற்றொடரை நோக்குக. இங்கே 'ஒடு' உருபு உயர்வின்கண் வந்தது.

**41.** ஆலயம் தன்னைக் கண்டார்
அரன்தனைத் தொழுது நின்றார்;
ஆலயம் தன்னைச் சார்ந்தார்
அரனையே அடைந்தார் ஆனார்;
ஆலய நடுவுள் மேவும்
அம்பலம் தன்னைக் கண்டார்;
ஆலய இறைவன் தோற்றும்
அருளையே அடைந்தார் ஆனார்.

**இப்பாட்டின் கருத்து:**

தில்லைவாழ் அந்தணரோடு பின் நடந்த திருநாளைப்போவார் முன்னே இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைக் கண்டார். அந்த ஆலயத்தை அரன் என்றே கருதி வழிபட்டார். அதன்பின் ஆலய நடுவுள் சென்றார். அப்பொழுது அரனையே அடைந்தார் ஆனார். அதன்பின் ஆலய நடுவுள் (நான்கு பொருள்) உடம்பில் இருதயம் போல் பொருந்தியிருக்கின்ற திருச்சிற்றம்பலத்தைக் கண்டார் அப்பொழுது இறைவன். உண்டாக்கும் பெரிய அருளை பெற்றவர்போல் ஆனார்.

**42.** அருளுக்கு முதன்மை ஆகும்
அன்பினைக் கண்டாற் போலவப்
பொருளுக்கும் முதன்மை ஆகும்
புண்ணியன் தனையே கண்டார்
இருளுக்கே எதிரி ஆகும்
எல்லியைக் கண்டாற் போல
மருளுக்கே மாற்றம் ஆகும்
மன்னவன் தன்னைக் கண்டார்.

**இப்பாட்டின் கருத்து:**

எப்பொருளுக்கும் முதன்மையாய் இருக்கின்ற அறவடிவான இறைவனை அருளுக்கு அடியான அன்பினைக் கண்டாற்போல கண்டார். ஆணவ இருளுக்கு எதிரியாய் இருக்கின்ற அறிவொளியைக் கண்டாற்போல மயக்க உணர்வுகளுக்கு எல்லாம் மாறுபாடாய் உள்ள தெளிந்த அறிவு வடிவைக் கண்டார்.

# வேறு

43. பிறந்தநாள் தொடங்கி மனத்தினால் நினைந்து
பிறங்கிட விழியினால் காணா
மறைந்ததோர் தெய்வ வடிவினை - இன்று
மறைப்பற விழியினால் கண்ட
சிறந்தநல் தொண்டர் சிந்தைதான் ஒன்றி
சேர்ந்தஎப் பொருளிலும் செலாமல்
அறந்தரு திருவாம் அம்பலக் கூத்தன்
அருள்உரு அதனில் நின்றதுவே.

**இப்பாட்டின் கருத்து:**

ஒருவன் பிறந்த காலந் தொடங்கி அரிய பொருள் ஒன்றை உணர்ந்து அதனைப் பெறவேண்டும் என்று மனத்தளவில் விரும்பி இருந்தான். அப்பொருள் விரும்பிய உடனே விழியால் பார்ப்பதற்கு கிட்டாமல் இருந்தது. மேற்கண்ட பொருளை விழியால் பார்ப்பதற்குத் தடையேதும் இல்லாமல் அது கிடைத்தது. கிடைத்த அச்சிறந்த பொருளை விழியோடு கூடிய சிந்தையால் கண்டாற்போல அம்பலக்கூத்தன் திருவருள் ஒன்றையே கருதி அயலிலுள்ள எப்பொருளிலும் செல்லாமல் ஒன்றி இருக்குமாறு நந்தன் கண்டார் என்க.

**44.** எண்ணாய் எழுத்தாய் சொற்பொருளாய்
இயலே நிறைந்த இயற்றமிழாய்
பண்ணாய்ப் பாட்டாய் நாட்டியமாய்
பரந்து நிற்கும் பெருமானை
மண்ணோர் எல்லாம் போற்றிட
மாண்பு நிறைந்த தம்முடைய
கண்ணால் கருத்தால் அருள்உணர்வால்
கண்டார் நாளைப் போவாரே.

**இப்பாட்டின் கருத்து:**

திருநாளைப்போவார் என்னும் சிறந்த தொண்டர் எண், எழுத்து என்கின்ற இயற்றமிழாகவும், பண், பாட்டு ஆகிய இசைத்தமிழாகவும், நாட்டியம் என்கின்ற நாடகத்தமிழாகவும் விளங்கி இருக்கும் கூத்தப்பெருமானை இவ்உலக மக்கள் எல்லாம் போற்றிட மாண்பு நிறைந்த கண்ணாலும், கருத்தாலும் அருள் உணர்வாலும் கண்டார் என்க.

**குறிப்பு:**

காணவேண்டியவற்றை காணுதல் கண்ணுக்கு மாண்பு என்க.

# திருநாளைப்போவார் இறைவனுடைய அருள் ஒளியில் ஒடுங்கியது

**45.** கண்ணும் சிந்தையும் அன்பினால்
　　ஒன்றிடக் கண்டநம் தொண்டன்மேல்
எண்ணி லாததன் திருவருள்
　　ஒளியினை இறைவனார் பொழிந்திட்டார்
மண்ணில் யாவரும் வியப்புற
　　உடலுடன் மன்னியே மறைந்திட்டார்
தண்ணிலாவிய மங்கலச் சிவஒளி
　　தகும் உயிர்க்கு இடமாமே.

**இப்பாட்டின் கருத்து:**

எங்கும் நிறைந்தவரும் சத்காரிய வாதப்பொருளாய் உள்ளதாய் சிறந்து தோன்றுபவரும் மிக்க பொருளாய் இருப்பவரும் ஆகிய இறைவன் கண்ணாகிய ஞானேந்திரியமும், சிந்தையாகிய அந்தக் கரணமும் ஒன்றாய் விளங்க இறைவனைக் கண்டு உணர்ந்த திருத்தொண்டர்மேல் எல்லையற்ற தம் திருவருளைப் பொழிந்திட்டார். அத்திருவருள் பேரொளிக்குள் மண்ணுலக மக்கள் எல்லோரும் கண்ணால் கண்டு வியப்படையும்படி மாயாகாரிய உடலோடு மறைந்துவிட்டார். அப்பும், அனலும் என்னும் இரண்டுள் அப்பின் வடிவமாய் இருக்கின்ற மங்கலச் சிவவொளி பக்குவமாய் உள்ள எல்லா உயிர்க்களுக்கும் பேறாய் இருக்கும் பெருமை உடையதன்றோ!

## கண்டோர் கூற்று

46\. நல்ல குலத்தில் பிறந்தாலும்
நந்தன் பேறு நமக்கில்லை
ஒல்லும் உயர்ந்த குலந்தன்னில்
உதித்த நமக்குப் பயனென்னே!
செல்வம் கல்வி குடிப்பிறப்பு
சிறப்பு முதலாம் இவையெல்லாம்
அல்லல் விளைக்குந் தடையாகும்
அரனார் அருளைப் பெறுவதற்கே.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

**குறிப்பு:**

தமிழிலக்கியங்களில் கண்டோர் கூற்று என்ற ஒரு பகுதி உறுப்பாக அமைக்கப்பெற்றுள்ளது. இப்பகுதியுள் காப்பிய நிகழ்ச்சிகள் பற்றி பல மக்களும் சிந்தித்துக் கூறும் செய்தி அமைந்திருக்கும் என்க. இதனை நூற்பொருள் அறிமுகம் என்றே கூறலாம். நல்லக்குடியில் பிறந்த ஒருவர் இந்நிகழ்ச்சியைக் கண்டு கூறுவது. இக்கூற்று பக்கத்தில் இருந்த தில்லைவாழ் அந்தணரைக் குறிக்கும்.

# அறிஞர் கூற்று

47. உடம்பும் மிகையாம் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு என்றே அறமுரைக்கும்
உடம்பை நிலத்திற் போடாமல்
அதனோடு வெளியில் கலந்திட்டார்
அடங்கத் துறந்த அறிவோர்க்கும்
அதிகர் ஆகும் இவரென்றே
நடங்கொள் பெருமான் நல்லடியார்
நன்று கூறி மகிழ்ந்தாரே!

**இப்பாட்டின் கருத்து:**

பிறப்பை ஒடுக்கக் கருதிய அறிஞருக்கு உடம்பும் யான், எனது என்னும் பற்றுக்கு உரியதாதலின் அதனையும் நீக்கியே வீடுபேற்றை அடைய வேண்டும். ஆனால் இங்கே திருநாளைப் போவார் தம் உடம்பை மற்றவர்போல நிலத்தில் போடாமல் அதனுடனேயே இறைவனுடைய திருவருளில் கலந்துவிட்டார். இத்தகையபேறு திருஞானசம்பந்தர் முதலான சிலருக்கே கிடைத்தது.

48\. வீடு தன்னையே பெற்றிட
விரும்புவோர் மிகப்பலர் ஆவாரே
சேடு தங்கிய தொண்டையே;
விரும்புவர் சிற்சிலர் ஆவாரே
ஏடு தங்கிய இறைவன்தான்
தொண்டரை எளிதினில் ஆட்கொள்ளும்
பீடு தங்கிய தொண்டரின்
பெருமையே பெரிதினில் பெரிதாமே.

**இப்பாட்டின் கருத்து:**

சிவனடியார் இருவகையினர் அவருள் ஒருவகையினர் மோட்சம் ஒன்றையே பெற விரும்புவர். மற்றொரு சாரார், தம் பேறாகிய மோட்சத்தை சிறிதும் விரும்பாமல் இறைவனுக்குச் செய்யும் தொண்டு ஒன்றையே விரும்புவர். இவ்விருவருள் தொண்டு ஒன்றையே விரும்பும் அடியவரை இறைவன் அறிந்து அவருக்கு உயர்ந்த பேறாகிய வீடுபேற்றைத் தருகின்றான். இக்கருத்தை கூறுவது இப்பாட்டு என்க.

49. பண்டைநல் தவத்தால் தோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியிடைத் தொகுப்பன் என்றே
ஒண்டமிழ் ஆகமம் தான்
உரைக்கும் அவ்வுரைக்கு ஏற்ப
கண்டநல் நூலைப் போவார்
காதைதான் அமைந்தது அன்றே!

**குறிப்பு:**

ஒண்டமிழ் ஆகமம் என்பது சிவஞான சித்தியாரை.

**அப்பாட்டைக் கீழே காண்க**

பண்டைநல் தவத்தால் தோன்றிப்
பரமனைப் பக்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியிடைத் தொகுப்பன்; மார்கர்
கண்டனுள்ஓடி வீடு காதலிப்பார்கட்கு
ஈசன் புண்டரிகத்தால் சேரும்
பரிசினை புகரல் உற்றாம்.

சிவஞானசித்தியார் தான் செய்த சிவஞானசித்தி என்னும் நூல் யாருக்குப் பயன்படும், யாருக்குப் பயன்படாது என்பதை மேற்பாட்டால் விளக்கிக் கூறுகின்றார்.

**இப்பாட்டின் கருத்து:**

பழைய நல்ல தவத்தின் பயனாய் இவ்வுலகத்தில் பிறந்து பரமனைப் பக்தி செய்கின்ற தொண்டரை அப்பரமனே தூய சாயுட்சமான சிவகதியிலே சேர்த்து விடுகின்றான். எனவே, அவர்களுக்காக இந்நூல் செய்யப்படவில்லை பின்னை யாருக்கு செய்தது எனின் சன்மார்க்கத்தில் நிற்போர் சைவசாத்திரங்களைப் படித்து அதனாலே ஞானத்தைப் பெற்று மோட்சம் அடைவார்கள் அல்லவா? அவர்களுக்காகவே சிவஞானசித்தியார் செய்யப்பட்டது என்க.

# நூலாசிரியன் கூறிய இந்நூலைப் பற்றி பொதுக்கருத்தும் வாழ்த்தும்

**50.** உயர்ந்த குலத்தோர் தாமெல்லாம்
ஒத்த அண்ணன் தாமாகி
நயந்த தாழ்ந்த குலத்தரெலாம்
நல்ல தம்பி தாமாகி
வியந்து கூறும் இந்நிலையில்
விரும்பி நன்றாய் வாழ்ந்திட்டால்
வசந்த கால மலர்போல
வையம் எல்லாம் முகம்மலரும்.

**இப்பாட்டின் கருத்து:**

உயர்ந்த குலத்தவர் எல்லாம் ஒத்த கருத்துடைய அண்ணன்மார் போலவும் தாழ்ந்த குலத்தோர் எல்லாம் தகுதி வாய்ந்த தம்பிமார் போலவும் இவ்வுலகத்தில் வாழ்ந்து வருவாரேயானால் இந்த உலகத்தில் கலகம், போர் முதலான எதுவும் இல்லாமல்போக வசந்த காலத்தில் மலர்ந்த மலரைப் போல மக்களுடைய முகமெல்லாம் நன்கு மலர்ந்திருக்கும்.

## ஆசிரியரின் கருத்து

51. வேற்றுமை பெற்ற நாற்பால்
மக்களுள் கீழ்ப்பால் வாழ்வோன்,
ஏற்றநல் செயலே செய்யின்
இன்னவன் கீழோன் ஆகான்;
ஆற்றல்சேர் அந்த ணாளன்
ஆகுவன், என்னும் நீதி
தோற்றிட இறைவன் செய்த
தூயநல் விளையாட்டு ஈதால்.

**இப்பாட்டின் கருத்து:**

வீரசைவ சமய பேரறிஞர் எல்லாம் குலத்தால் தாழ்ந்த மக்களை உயர்த்த வேண்டும் என்னும் கருத்தினை உடையவராவர். இவரெல்லாம் புலையர் முதலான தீய

குலத்திலிருந்து தம் சமயத்தில் வந்தவரை புலையர் என்ற தாழ்ந்த பெயராலே அழைக்கவில்லை. இவரை திருக்குலத்தார் என்ற உயர்ந்த பெயராலேயே அழைப்பர். அதுவுமன்றி அந்தணருக்குரிய ஐய்யர் என்ற பட்டத்தையும் அவருக்கு கொடுத்து வழங்குவர். சிவநாகமர் என்னும் சாக்கியரை ஐயர் பட்டம் கொடுத்து சிவநாகமய்யர் என்று வழங்கி வருகின்றனர் வீரசைவர்கள். அதுபோல மடிவாளன் ஐயவர் என்னும் வண்ணானுக்கு ஐய்யர் பட்டம் கொடுத்து மடிவாளமாட்சி ஐய்யர் என்று வழங்கி வருகின்றனர்.

## வாழ்த்து

**52.** நாளைப் போவார் திருக்கதைதான்
நாட்டில் நன்கு வாழ்ந்திடுக
நாளைப் போவார் திருக்குலத்தார்
நன்றாய் தூய்தாய் வாழ்ந்திடுக
நாளைப் போவார் குலத்தாரும்
நாட்டில் மற்ற குலத்தாரும்
கேளைப் போல உறவாகி
கீழ்மேல் இன்றி வாழ்ந்திடுக.

**இப்பாட்டின் கருத்து:**

இப்பாட்டுப் பொருள் வெளிப்படை.

## அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (96) தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை இவர் ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 55 நூல்களைப் படைத்துள்ளார். அவை வருமாறு:

அடிகளாசிரியர் படைப்புகள்

### 1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

| | | |
|---|---|---|
| 1. | அருணகிரி அந்தாதி - சரசுவதிமகால் வெளியீடு | 1967 |
| 2. | மருதூரந்தாதி உரை - சரசுவதிமகால் வெளியீடு | 1968 |
| 3. | காலச் சக்கரம் - சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) | 1969-79 |
| 4. | வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) - (சரசுவதிமகால் வெளியீடு) | 1970-8-91 |
| 5. | சிவஞான தீபம் உரை - சரசுவதிமகால் வெளியீடு | 1970 |
| 6. | சிவப்பிரகாச விகாசம் உரை - (சரசுவதிமகால் வெளியீடு) | 1977 |

ஆ) உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டவை)

| | | |
|---|---|---|
| 7. | முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை | 1938 |
| 8. | சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை | 1967 |
| 9. | தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) | 1967-58 |
| 10. | திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை | 1956 |
| 11. | திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை | 1981 |
| 12. | சிவப்புராணச் சிற்றுரை | 1986-99 |
| 13. | சதமணிமாலை மூலமும் உரையும் | 1990 |
| 14. | சித்தாந்த சிகாமணி அங்கத்தலத் திரட்டு உரை | 1992 |
| 15. | ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை | 1993 |

16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001
18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002

## 2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

19. வீரசைவப் பிரமாணம் 1936
20. சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
21. சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939
22. காமநாதர் கோவை 1957
23. மேன்மைப் பதிகம் 1957
24. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

## 3. ஆராய்ச்சி நூல்கள்

25. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
26. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்) 1977
27. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
28. தொல்காப்பியம் - சொல் - இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1990
29. தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
30. தொல்காப்பியம் - பொருள் எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) (அச்சில்)

## 4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) செய்யுள் வடிவம்

31. பிள்ளைப்பாட்டு 1945
32. திருஅரசிலிக் காதை 1948
33. குழந்தை இலக்கியம் 1963
34. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964-1975
35. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
36. அரசியல் இயக்கம் 1981
37. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
38. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
39. உளத்தூய்மை 1984-94

| | | |
|---|---|---|
| 40. | தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) | 1990 |
| 41. | மறவர் நத்தக்குன்றமூரும் திருமுருகன் | 1993 |
| 42. | தொழிலியல் | 1993 |
| 43. | மெய்ப்பொருட் கீதை (மெய்ப்பொருள் நாயனார் வரலாறு) | 1995 |
| 44. | தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) | 1996 |
| 45. | ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) | 1999 |

ஆ. உரைநடை

| | | |
|---|---|---|
| 46. | எங்களூர் | 1937 |
| 47. | தொடக்கப்பள்ளி - நாடகம் | |
| 48. | வீரசைவ சிவ பூஜாவிதி | 1949 |
| 49. | விலையேற்றமும் வாழும் வழியும் | 1984 |
| 50. | திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்) | 1988 |
| 51. | காயத்துள் நின்ற கடவுள் | 1999 |
| 52. | திருவாசக அநுபூதி | 2000 |
| 53. | கீதையின் அறிவுப் பொருள் | 2000 |
| 54. | திருமந்திர உணர்வு | 2001 |
| 55. | தொல்காப்பியச் செய்யுளியல் - உரைநடை | (அச்சில்) |

## பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2. கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3. பிரபுலிங்கலீலை உரை
4. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7. திருக்குறள் உரை (133 குறள் வரை)
8. முப்பால் - உரைநடை
9. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்

# திருநாளைப்போவார் திருக்காதையின் செய்யுள் முதற்குறிப்பகராதி

| | |
|---|---|
| அண்டை (30) | தில்லைக்கோயில் (26) |
| அந்தசேரி (16) | தில்லைநகரை (28) |
| அந்தநாட்டில் (9) | தில்லைப் (34) |
| அந்தபுலையர் (13) | தி[illegible]லவாழும் (36) |
| அருளாம் (10) | தி[illegible]லைவாழ் (24) |
| அருளுக்கு (42) | [illegible]தாண்டர் (35) |
| அன்பார் (39) | நல்லஉளத்தைப் (7) |
| அன்பான (18) | [illegible]லகுலத்தில் (46) |
| ஆலயம் (41) | [illegible]ல்லோர் (29) |
| இந்த (37) | ந[illegible]ட்காலை (2) |
| இருவர்தம் (33) | [illegible]ள்தோறும் (25) |
| இறைவன் (38) | [illegible]ளைப் (1) |
| உடம்பும் (47) | நாளைப்போவார் (23) |
| உயர்ந்த (50) | [illegible]ளைப்போவார்திருக் (52) |
| உயிர்ஒன் (32) | நீரும் (5) |
| உழைப்பும் (6) | [illegible]ண்டைநல் (49) |
| எண்ணாய் (44) | பாணர் (14) |
| கங்கைக் (27) | பிறந்தநாள் (43) |
| கண்ணும் (45) | புலையாம் (17) |
| சேக்கிழார் (22) | பேறாய் (21) |
| சேற்றில் (15) | பொய்யே (12) |
| சைவசமய (3) | பொன்னிப் (4) |
| தம்ஊரின் (19) | முன்னைப் (40) |
| திருக்கோயில் (20) | வந்த (8) |
| திருப்புன்கூர் (11) | வீடு (48) |
| தில்லைக் (31) | வேற்றுமை (51) |



## திரு. அடிகளாசிரியன்

என்னோடு இருக்கும் இறையவனே
என்றன் நினைவை அறிவாயே
பொன்னோ பொருளோ விரும்புகிலேன்
போதும் போதும் இனிப்பிறப்பு
நின்னோடு ஒன்றிச் சிவமாகும்
நேய நிலைமை கிடைத்துவிட்டால்
என்னே இனியான் வேண்டுவது?
இதன்மேல் ஒன்றும் வேண்டேனே.

அறிவு டிசைன்ஸ், சிதம்பரம்.
செல்: 9443115921.